Registered as a Newspaper

NEW MASTER
INSTITUTE
B.M.C. Lane, JAFFNA.
89 & 90 A/L
கலை, வர்த்தகம்
பொருளியல் -சின்னத்தம்பி
வர்த்தகம் -தேவா
கணக்கியல் -யோகராஜா
அளவையியல்-சந்திரராஜா
தமிழ்
இந்து நாகரிகம் } பாலா
அரசியல் -மனோசரன்

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ 2/-

NEW MASTER
INSTITUTE
1st Lane,
Power House Road,
JAFFNA.
89 A/L
கலை, வர்த்தகம்
Day Class
ஆரம்பம்;
12-09-1988
திங்கள் காலை 7.30 மணி

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஞூ ஆவணி மீ 17 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1408 முஹர்ரம் பிறை 19 ( 02 - 09 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 173

## விடுதலைப் புலிகள், ஜே. வி. பி.

# போராளிகளுக்கு மன்னிப்பு வழங்கி போர்நிறுத்தம் செய்க!

## இலங்கை அரசாங்கத்திடம் ஒற்றுமை இயக்கம் கோரிக்கை

கொழும்பு, செப்டெம்பர் 2

* தமிழீழ விடுதலைப் புலிகள், மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி.) உட்பட சகல போராளிகளுடனும் இலங்கை அரசாங்கம் போரை நிறுத்த வேண்டும்.

* அரசியல் கைதிகள் யாவருக்கும் எவ்வித வேறுபாடும் இன்றி இலங்கை அரசு மன்னிப்பு வழங்கவேண்டும்.

* தமிழீழ விடுதலைப் புலிகள் ஜே. வி. பி. இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் உட்பட கைது செய்யப்பட்ட அனைவரையும் அரசு விடுதலை செய்யவேண்டும்.

இவ்வாறு தேசிய ஒற்றுமைக்கான இயக்கம் நாட்டில் அமைதியை உருவாக்க வெளியிட்டுள்ள ஏழு அம்சத்திட்டம் ஒன்றில் தெரிவித்துள்ளது.

நாடு அராஜகத்தை நோக்கி நகர்வதைத் தடுக்க இந்த அமைதி யோசனைத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாக தேசிய ஒற்றுமைக்கான இயக்கம் இது சம்பந்தமாக வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

வடக்கிலும் தெற்கிலும் உள்ள போராளிக் குழுக்கள் தமது ஆயுதத்தை சுயேச்சையான அமைப்பு ஒன்றிடம் கையளிக்க வேண்டும் — அந்தச் சுயேச்சை அமைப்பு போராளிகளுக்கு மன்னிப்பு வழங்குவதைகண்காணிக்கும்.

அந்தக் காலத்தில் பொதுத் தேர்தலை நடத்தவகை செய்யலாம் — என்றும் பிரஸ்தாப இயக்கம் தனது அமைதித் திட்டத்தில் தெரிவித்துள்ளது.

அமைதித் திட்டத்தின் முக்கிய அம்சங்களில் மற்றும் சில வருமாறு:-

அரசாங்கம். பிரதான எதிர்க்கட்சிகள், வடக்குத் தெற்கு போராளிக் குழுக்கள் ஆகியவற்றின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புடைவை பார்சல் அன்பளிப்பு

பூஸா முகாமிலும், ஏனைய ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களிலும் உள்ளவர்களின் குடும்பங்களுக்கு 'போருட்' ஸ்தாபனம் புடைவைகள் அடங்கிய பார்சலை வழங்கியுள்ளது.

யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு சி வி. கே. சிவஞானத்தினால் பூஸா முகாமில் உள்ளவர்கள் எனச் சமர்ப்பிக்கப்பட்ட பெயர்ப் பட்டியலில் உள்ளவர்களின் குடும்பத்தினருக்கும்-

யாழ். அரச அதிபரினால் பூஸா மற்றும் ஏனைய முகாம்களில் உள்ளவர்கள் என சமர்ப்பிக்கப்பட்ட பெயர்ப் பட்டியலில் உள்ளவர்களின் குடும்பத்தினருக்குமே இந்தப் பார்சல்கள் வழங்கப்பட்டன.

500 ரூபா பெறுமதியான இப்பார்சலில் வேட்டி, சேலை, படுக்கை விரிப்பு, சேட் துணி, சாரம், சட்டைத்துணி என்பன அடங்கி இருந்தன. (ஒ-10)

## மூன்றுவது அணி நிறுவப்படும்

கொழும்பு, செப் 2

இலங்கை இராணுவத்துக்குப் புதிதாக சுமார் நாலாயிரம் பேர் சேர்க்கப்படவுள்ளனர்.

இப்போதுஇராணுவத்திலுள்ளோரின் எண்ணிக்கை 30 ஆயிரம் ஆகும்.

புதியவர்கள் சேர்க்கப்பட்டதும், பன்னிரண்டு பட்டாலியன்கள் அடங்கிய மூன்றுவது இராணுவ அணி ஒன்று உருவாக்கப்படும். (ஒ-ஐ)

## இடைத் தேர்தல் 29 இல்

ஹொரவப்பொத்தான தேர்தல் தொகுதிக்குப் புதிய எம். பியைத் தெரிவு செய்வதற்கான இடைத் தேர்தல் இம்மாதம் 29 ஆம் திகதி நடைபெறும்.

இடைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் நேற்றுத் தமது நியமனப் பத்திரங்களை அனுராதபுரம் கச்சேரியில் தாக்கல் செய்தனர்.

ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் ஒருவரும், இரு சுயேச்சைகளும் தேர்தலில் போட்டியிடுகின்றனர். [அ]

## நெல்சன் மண்டேலாவை தென்னுபிரிக்க நீதியமைச்சர் சென்று பார்த்தார்!

கேப்டவுன், செப். 2

கறுப்பு இனத் தலைவர் நெல்சன் மண்டேலாவை தென் ஆபிரிக்க நீதி அமைச்சர் நேற்றுச் சென்று பார்த்தார்.

இச்சந்திப்பு தனியார் மருத்துவமனை ஒன்றில் இடம் பெற்றது.

மூன்று வாரங்கள் காசநோய்க்கு அரசு மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெற்று வந்த மண்டேலாவை அரசாங்கம் நேற்று தனியார் மருத்துவ மனைக்கு இடம்மாற்றியது தெரிந்ததே.

அமைச்சர் சென்று பார்த்தது, மண்டேலாவை அரசு விடுதலை செய்யும் என்ற ஊகத்தைப் பலப்படுத்தி இருக்கிறது என்று அவதானிகள் தெரிவித்தனர். (ஒ-எ)

## முச்சந்தி முரளி



மண்டேலாவை விடுதலை செய்யிறதுக்கு சாடை மாடையாக நினைக்கிறோ போத்தா.....?

## வீட்டின் முன்னுல் நடந்த உண்ணுவிரதம் வெற்றி

### மகனைப் பார்த்தார் தந்தை

யாழ்ப்பாணம், செப். 2

அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்ட தமது மகனைப் பார்க்க அனுமதி அளித்ததை அடுத்து காங்கேசன்துறையில் தமது வீட்டின் முன்னுல் உண்ணுவிரதமிருந்த பெற்ருேர் அதனைக் கைவிட்டனர்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி இந்திய அமைதிப்படையினரால் காங்கேசன்துறை ஊறணியைச் சேர்ந்த கனகரத்தினம் குணன் என்ற நடேஸ்வராக் கல்லூரி மாணவன் கைது செய்யப்பட்டார்.

அவரது விடுதலை தொடர்பாக பெற்ருேர் அமைதிப்படையின் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டும் அவரைப் பார்க்கவும் முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் கடந்த 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இவரது தாயும் தந்தையும் தமது வீட்டின் முன் உண்ணுவிரதம் இருக்க ஆரம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காமினி வாக்குறுதி

கொழும்பு, செப். 2

பூஸா கைதிகள் தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று காணி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸாநாயக்கா தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலத்திடம் தெரிவித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளையில், பூஸாவில் சாகும்வரை உண்ணு

(6ஆம் பக்கம் பார்க்க)

## பூஸா தமிழ்க் கைதிகளை பார்வையிடுவதற்கான திகதி இன்று அறிவிக்கப்படும்

யாழ்ப்பாணம். செப். 2

பூஸா தடுப்பு முகாமில் இருக்கும் தமிழ்க் கைதிகளை உறவினர்கள் சென்று பார்வையிடுவதற்கான திகதி இன்று அறிவிக்கப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை வடக்கு - கிழக்கு பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழு மேற்கொண்டுள்ளது.

இதேவேளை நேற்று வரை 25 பேர் தமது பெயர்களை பூஸா செல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சுபநேரம்

02 - 09 - 88

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
06.05முதல் 07.35வரை

ராகுகாலம்:
10.35முதல் 12.05வரை

கார்த்திகை விரதம்

## ஒருவர் விடுதலை: எனினும்

## காங்கேசன் ஊழியர் பகிஷ்கரிப்புத் தொடர்கிறது

யாழ்ப்பாணம், செப். 2

கைது செய்யப்பட்ட காங்கேசன் துறை லங்கா சிமெந்து ஸ்தாபன ஊழியர்களில் ஒருவர் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

எனினும் ஏனைய மூவரையும் விடுதலை செய்யும் வரை லங்கா சிமெந்து ஸ்தாபன ஊழியர்களது பகிஷ்கரிப்பு (ஒத்துழையாமை) தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களது பகிஷ்கரிப்புக்கு ஆதரவாகவும், கைதான ஊழியர்களை விடுதலை செய்யக்கோரியும் இன்று காங்கேசன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் மாவட்டத்தில்

# 65,000 சேதமுற்ற வீடுகளை புனரமைக்கும் வேலை ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், செப் 2

வடக்கு, கிழக்குப் பகுதியில் தற்போது நிலவிவரும் நிலைமைகள் காரணமாக, யாழ் மாவட்டத்தில் 'கெயார்' ஸ்தாபனம் மேற்கொள்ளவிருந்த வீடமைப்பு புனர் நிர்மாண வேலைகளில் ஸ்தம்பிதம் ஏற்பட்டிருக்கின்றது.

இதனால் பிரஸ்தாப ஸ்தாபனம் யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளவிருந்த 65 ஆயிரம் வீடுகளின் புனர் நிர்மாண வேலைகளை தற்போது மேற்கொள்ள முடியாமலிருக்கிறது.

1983 ஆம் ஆண்டிலிருந்து வடக்கு, கிழக்கு பகுதிகளில் அசம்பாவிதங்களினுல் அழிவுக்குள்ளான வீடுகளையும், சேதமடைந்த வீடுகளையும் புனர் நிர்மாணம் செய்யும் திட்டத்தை மேற்கொள்ள 'கெயார்' ஸ்தாபனம் முடிவு செய்தது.

யாழ் மாவட்டத்தில் இதற்கான பூர்வாங்க வேலைகள் இந்த வருடம் பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கபபட்டன. பூர்வாங்க வேலைகள் யாவும் கடந்த ஜூன் மாதத்துடன் முடிவடைந்தன.

'கெயார்' ஸ்தாபனம் மேற்கொண்ட ஆய்வின்படி யாழ் மாவட்டத்தில் மாத்திரம் 65 ஆயிரம் வீடுகள் 1983 ஆம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் கைது:

# மதுரையில் இன்று கண்டன மாநாடு

சென்னை, செப். 2

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து கண்டன மாநாடு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை மதுரையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திராவிடர் கழகம், காமராஜர் காங்கிரஸ் ஆகியன சேர்ந்து இந்த மாநாட்டை நடத்துகின்றன.

காமராஜர் காங்கிரஸ் தலைவர் ப நெடுமாறன் இதனை அறிவித்திருக்கின்ருர்.

மதுரையைத் தொடர்ந்து தமிழகத்தின் மற்றைய முக்கிய நகரங்களிலும் கண்டன மாநாடு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய துணை வேந்தர் பதவி ஏற்ருர்

யாழ்ப்பாணம், செப். 2

யாழ். பல்கலைக்கழக துணை வேந்தராக பேராசிரியர் அ. துரைராசா நேற்று பதவி ஏற்ருர்.

இதுவரை காலமும் பேராசிரியர் துரைராசா திறந்த வெளி பல்கலைக்கழகத்தில் கடமையாற்றி வந்தார் என்பது தெரிந்ததே. (ஒ-5)

## தடுப்பு முகாம்களில் உள்ளோரை விடுவிக்கக் கோரி 'கைஸ்' கையெழுத்து இயக்கம்

யாழ்ப்பாணம், செப் 2

ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களில் விடுதலை வேண்டி உண்ணுவிரதம் இருப்போரையும் ஏனையோரையும் விடுதலை செய்யக் கோரி மாணவர் இளைஞர் பொதுமன்றம் (கைஸ்) கையெழுத்து இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

நாளை மூன்றும் திகதி தொடக்கம் இக் கையெழுத்து இயக்கம் சகல பாடசாலைகளிலும் மேற்கொள்ளப்படும்.

ஸ்ரீலங்கா அரசின் இராணுவ முகாம்களில் உண்ணுவிரதம் இருக்கும் இளைஞர்களை விடுதலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நித்திகைக்குளத்தில் போராளிகள் முகாம் அழிக்கப்பட்டதாக அறிவிப்பு

புதுடில்லி செப் 1

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதான முகாம் ஒன்றை நித்திகைக்குளம் காட்டில் இந்திய அமைதிப் படை அழித்து விட்டதாக இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரதான முகாமே போராளிகளின் தலைமை அலுவலகமாக இருந்ததாகவும் இந்திய அமைதிப் படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி இந்தியத் தரப்பில்தெரிவிக்கப்பட்டது.

அமைதிப் படைக்கும் தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கும் இடையில் கடந்த சில நாட்களாகஇடம்பெற்ற மோதலில் 70 போராளிகள் இறந்ததாகவும் 25 பேர் காயமுற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அமைதிப் படை தரப்பிலும் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனுல் என்

(6 ஆம் பக்கம் பார்க்க)

PETER'S
9, JUBILEE BAZAAR,
JAFFNA.
சகலவிதமான ட்ருன்ஸ்போமர்களும், T.V., டெக், ட்ருன்ஸ்போமர்ஸ், ஸ்ரேபிலைசர் (Stablizer), பூஸ்டர்கள் (Boosters), மின் விசிறிகள், மின் அரைப்பான்கள் (Grinders), சகலவித மோட்டேர்ஸ் (3 Face, Single Face), அவுட்போட் மோட்டர் கொயில்கள், தண்ணீர்ப் பம் கொயில்கள், மோட்டார் சைக்கிள் மக்னற்ரோ கொயில்கள் உத்தரவாதத்துடன் உடன் செய்து கொடுக்கப்படும்.
பீற்றேர்ஸ்
றிவைன்டிங் வேக்ஸ்
9, ஜுபிலி பஜார்,
(ராணி தியேட்டருக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம்.
(6089)

'ஷப்ரு' அறிவித்தல்
இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களுக்கமைய நேற்று (01-09-1988) முதல் ஷப்ரு நிதி நிறுவனம் முதலீடுகளின் வட்டிவீதத்தை அதிகரித்திருக்கிறது.
மேலதிக விவரங்களுக்கு:-
ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(C-29)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Honda Re-Condition மோட்டார் சைக்கிள் விற்பனைக்குஉண்டு. C 90, Hao 2, C 50, CF 50 Charly, ST 50, MB 5 என்பனவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: Cycle Centre, 148, (230) K. K. S. Road, Jaffna. TP 23807. (6222)

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் அலுமாரி கட்டில் மெத்தை Vono Spring கட்டில், கண்ணுடி மேசைகள், கடைச் சோக்கேஸ், சாப்பாட்டு மேசைகள், Show Case, காரியாலய மேசைகள், மற்றும் பித்தளை, கிளாஸ் வகைகள் உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக்ஸ் சந்தியருகில். (6103)

புதிய PL-4 சிறிய லேத்மெசின் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: பிள்ளையார், 259, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். (6217)

18''-21'' அங்குல உயரமுடைய விநாயகர் நடேசர் விக்கிரகங்கள் உற்சவத்திற்கு ஏற்றவை விற்பனைக்குண்டு. தொடர்பு:- பிள்ளையார் 259, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (6216)

### அரைச்சலார்

31- 10- 88 வரை விஷேட சலுகை, உங்கள் குளிர்சாதனப் பெட்டிகளை ரூபா 600/- மாத்திரம் செலுத்தி ஒரு வருட உத்தரவாதத்துடன் Gas நிரப்பிக் கொள்ளுங்கள் வீடுகளுக்கு வந்தும் வேலைகள் செய்யப்படும். தொடர்பு Omega Manipay Road, Jaffna. (6221)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புரேய்லர் இறைச்சி இன கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய இடம்; நவில் குருடர் செவிடர் பாடசாலை, கைதடி. (6097)

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நீதிமன்ற வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T. மகாதேவா, விற்பனைத் திணைக்களம். பருத்தித்துறை. (6223)

## தேவை

பிரபலமான அச்சகத்திலும் பத்திரிகை ஸ்தாபனத்திலும் முதலீடு செய்யப் பங்காளர்கள் தேவை. முழுமையான விபரங்களுடன் நேரில் சமுகமளிக்கவும். தொடர்பு:- நம்நாடு இன்வெஸ்ற்மென்ற் புரொஜெக்ற், 192, கே. கே. எஸ். வீதி, சுன்னுகம். (6219)

மெஷின் மைன்டர் (ஒட்லி சிலிண்டர்) அச்சுக் கோர்ப்போர்தேவை நேரில் வரவும். தொடர்பு:- நம் நாடு இன் வெஸ்ற்மென்ற் புரொஜெக்ற் 192, K.K.S. வீதி, சுன்னுகம். (6218)

### மணப்பெண்கள் தேவை

யாழ் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த கனடா செல்ல விரும்பும் 25 வயதிற்கு உட்பட்ட மணப்பெண்கள்தேவை. தொடர்பு ABCDE விவாகப் பொருத்துனர் 328, நாவலர் ரோட் ஆனைப்பந்தி. (6225)

### சிங்கப்பூருக்கு பணிப்பெண்கள் தேவை

சிங்கப்பூருக்கு பணிப் பெண்கள் உடனடியாகத் தேவை. முப்பத்தைந்து வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம். கல்வியறிவு அவசியமில்லை மிகக்குறைந்த செலவில், ஆறு கிழமைகளில் அனுப்பிவைக்கலாம். மேலதிக விபரங்களுக்கு துரைசிங்கம் 376 B, நாவலர் வீதி, (ஸ்ரான்லி கல்லூரிக்கு முன்) அரியாலை, யாழ்ப்பாணம். [6213]

### மணமகள் தேவை

யாழ் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த செவ்வாய்க்குற்ற மற்ற 26 வயதுடைய B. Sc. மெக்கானிக்கல் பொறியியலாளருக்கு கனடா, அல்லது அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கு ஸ்பொன்ஸர் செய்யக்கூடிய படித்த மணப்பெண்தேவை. தொடர்பு ABCDE விவாகப் பொருத்துனர் 328, நாவலர் ரோட், ஆனைப்பந்தி. (C 6224)

### மணமகன் தேவை

இந்து வேளாள குடும்பத்தில் A/L வரை படித்த பெண்ணிற்குப் பட்டதாரி, பயிற்றப்பட்ட ஆசிரியர், அல்லது அரச, வங்கி, கணக்கியல், சட்ட, முகாமைத்துவசேவையில் 29-35 வயதெல்லைக்குள்ளான மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும். விரும்பின் கனடா செல்லும் வாய்ப்புண்டு. ஜாதக விபரங்களுடன் தொடர்புகொள்க: இல. 184, C/o, உதயன், யாழ்ப்பாணம். [6080]

### தவறிவிட்டது

பாலேந்திரா செல்வநாயகி ஆகிய எனது அடையாள அட்டை 48இல் தொடங்கும் இலக்கமுடையது, கொக்குவிலுக்கும் தட்டாதெரு சந்திக்குமிடையில் தவறிவிட்டது. இதைக் கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து அதிலுள்ள விலாசத்தில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (6099)

### குழாய்க் கிணறுகள்

ரூபா 6500/- மட்டுமே! குறைந்த செலவில் சிறந்த முறையில் மனிதனின் சக்தியையும் மெஷினின் சக்தியையும் பாவித்து செய்யும் ஓர் கூட்டு முறை - மோட்டரோ, வோட்டர் பம் மூலமோ தொடர்ச்சியாக 24 மணித்தியாலமும் இறைத்துப் பார்க்கலாம். மின்சாரமோ, மோட்டரோ இல்லாதவர்களுக்கு கைப்பம்பு (Hand Pump) பூட்டிக் கொடுக்கப்படும். தொடர்பு: ஜெக்ஸ் இஞ்ஜினியர்ஸ் பருத்தித்துறை வீதி, கோப்பாய். (6207)

### TOEFL வகுப்புகள்

இலவச மாதிரி வினாப் பத்திரங்களுடன் நடைபெறுகின்றன. சனி, ஞாயிறு காலை 10/30—12/30, திங்கள், புதன் காலை 8/30—10/30 தொடர்புகொள்க: S. B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (6062)

### சிவா மெக்கானிக் வேக்

குளிர்சாதனப் பெட்டி, மின் விசிறி, மோட்டார், மின் அடுப்பு, அயன் மற்றும் மின்சார உபகரணங்கள் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சிவா மெக்கானிக் வேக், பிரதான வீதி, (அச்சுவேலி மாகாவித்தியாலயத்திற்கு அருகாமையில்), அச்சுவேலி. (6205)

### சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம். ஜாதகபலன் விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில் விருத்தி. மங்கள மணவாழ்வு, மனையில் இலக்குமி கடாட்சம், நோய்பிணி தீரல், சத்துருஜெயம், கிரகதோஷம் முதலான மாந்திரீக விடயங்களுக்கும் நாடுங்கள். 'சக்தி சரவணு' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடரும், மட்டக்களப்பு பாரம்பரிய - பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி, (யாழ்/ இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (6211)

## யாழ். செயலகம் வேலை முடிவு

யாழ்ப்பாணம் செப் 2 யாழ் செயலக வேலைகள் 31ஆம் திகதியுடன் முடிவடைந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சிவில் நிர்வாகச் சிர்குலைப்பின் ஓர் அங்கமாக செயலகம் ஒவ்வொருமாதத்தின்கடைசி வாரத்தில் மட்டுமே இயங்க அனுமதிக்கப் பட்டுள்ளது தெரிந்தே.

இதன்படி இம்மாத கடைசி வாரத்தில் மீண்டும் செயலகம் திறக்கப்படும். (ஓ-க)


# Business Cum Holiday Travelers

## A complete travel service awaits you at

# MACK TRAVELS

- Airline tickets at competitive rates.
- A friendly personalised service on all aspects of travel.
- For your Passports / Visas at short notice.
- For your domestic flight to and fro Colombo / Jaffna.

MACK TRAVELS
JAFFNA. (C 18)



# A/L 89 விஞ்ஞான மாணவர்கட்கு

## ORGANIC CHEMISTRY

ஆரம்பம் (03 - 09 - 88)
Batch I Sat & Sun 10.30 - 11.30 a.m
Batch II Sat & Sun 1.45 - 2.45 p.m
ஆசிரியர்:- நாகரட்ணம் B. Sc.

## முனையவியல்

Sat & Sun 9.30 - 10.30 a.m
ஆசிரியர்:- தம்பிராஜா B. Sc(Ceylon)
Electrostatics ஆரம்பம் 6- 9- 88
Tuesday 3.30 - 5.30 p.m
ஆசிரியர்:- மணியம் B. Sc. (Hons)
3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (C/5)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிரியையும்

**திரு. அ. வைத்திலிங்கம்**
(இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபக உறுப்பினர்)
(இளைப்பாறிய அதிபர் உரும்பராய் இந்துக்கல்லூரி)

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 25 - 05 - 1915 | 05 - 08 - 1988 |

எமது குடும்பத்தலைவரின் ஈமக்கிரியைகளிற் கலந்து கொண்டவர்களுக்கும் மலர் வளையம் அணிவித்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் ஏனைய உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்தியமும் 4-9-88 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணியளவில எமது இலலத்தில இடம்பெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

— குடும்பத்தினர்.

42/1, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம். (6279)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**திருமதி நல்லம்மா நித்தியானந்தன்**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 - 4 - 1920 | 3 - 8 - 1988 |

எமது அன்புத் தெய்வமே! எம்மை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு இறைவனடி எய்திய உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி,
உறவினர்கள்.

66, ஆத்திசூடிவீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல் :-
(க. கதிரவேலு,ச. வீரசிங்கம்)
(6102)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**உயர்திரு சதா ஸ்ரீநிவாசன்**

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 14- 09- 1918 | 02- 08- 1988 |

கர்மமே கண்ணுனர் கவலையற்றூர்
கலைதனின் மேன்மைக்கண்ணே
போல்வார்
தர்மமே தலை என்ற கர்வமுற்றூர்
தனக்கென வாழா தன்மை மிக்கார்
நிர்மலமான நெஞ்சமுற்றூர்
நீடிய இசைகேள் விதஞ்சம் பெற்றூர்
மர்மமாம் மாயன்வலை மயங்கலுற்று
மதிசேகரர் கழலை மருவினுரே...

எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

## ஆலயத்தில் திருட்டு

யாழ்ப்பாணம். செப். 2 யாழ் வண்ணுர்பண்ணை நாவலர் மகாவித்தியாலத்தில் உள்ள சமயகுரவர் ஆலயத்தில் இருந்து பெறுமதிமிக்க பித்தளை மற்றும் எவர்சில்வர் பொருள்கள் களவு போயுள்ளன.

கடந்த 28ஆம் திகதி இரவு இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக வித்தியாலய அதிபர் யாழ் பொலீஸ் பிரிவில் முறையிட்டுள்ளார். (ஒ-5-10)

## சோதனைகள் அதிகரிப்பு

யாழ் - வவுனியா நெடுஞ்சாலையில் உள்ள தடை முகாம்களில் சோதனைகள் தற்போது கடுமையாக்கப்பட்டுள்ளன. (இ-164)


## எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

(1) ✶ சிரஞ்சீவி ✶ ராதா ✶ சில்க்
"புலி"

(2) ✶ ஜெய்கணேஷ் — ✶ சுஜாதா
"பாடிப் பறந்த குயில்"

(3) "WHITE GHOST" — WAR FILM

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
[C/15]



# A/L 89 விஞ்ஞான மாணவர்கட்கு

## ORGANIC CHEMISTRY

ஆரம்பம்: 04-09-1988
SAT. & SUN. 4.00 — 5.00 p.m.
ஆசிரியர்.
நாகரட்ணம்
Manaltharai Lane,
KANDARMADAM.
(C 7)



## வெளிநிலைப் பல்கலைக்கழக கல்வி

G. A. Q.
அரசியல்:- தமிழ்
ஆரம்பம்: 03 - 09 - 88
சனி — 8.00 — 12 00
ஞாயிறு — 1 00 — 5.00
BECON
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (C/18)



## 89 A/L பகல் நேர வகுப்புக்கள்

ஆரம்பம் 05-09 88 திங்கள்
ஆசிரியர் நாகரட்ணம் (B. Sc)
Chemistry 6-30 a.m
ஆசிரியர் மணியம் B. Sc (Hons)
Physics 7-30 a.m
3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
(C/9)



நான்காவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு

## கோகுலன் வீடியோ ஹோம்

192/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

★ ஸ்தபானத்தார்
★ வாடிக்கையாளர்கள்,
★ நண்பர்கள் அனைவருக்கும்
மகிழ்ச்சியுடன் நன்றியைத் தெரிவிக்கின்றோம். (6272)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உயர் கல்லூரி

90 ஆம் ஆண்டிற்கான G.A.Q, B.A, 1st in Com.

விரிவுரைகள் ஆரம்பம்: 03-09-88

இதற்கான பல்கலைக்கழக பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினுல் செய்து தரப்படும், விபரங்களை நேரிலும் / தபால் மூலமும் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

S. அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

கிளை:
புதிய உயர் கல்லூரி,
மல்லாகம்.

(C-6423)



# முக்கிய அறிவித்தல்

இலங்கை மின்சார சபை

மின் தடை

அநுராதபுரம் - யாழ்ப்பாணம் 132 கே. வி. மின்மார்க்கத் திருத்த வேலைகள் 1988-09-04 ஞாயிறு நடைபெற இருப்பதால், அன்று காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை யாழ்ப்பாணப் பொறியியலாளர் பிரதேசத்தினதும், கிளிநொச்சிப் பொறியியலாளர் பிரதேசத்தினதும் சகல மின் அத்தியட்சகர் பிரிவுகளினதும் மின் விநியோகம் தடை செய்யப்படும் என்பதை இத்தால் சகல மின்பாவனையாளருக்கும் அறியத் தருகின்றேன்.

இதனுல் ஏற்படும் அசௌகரியங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

மின் பொறியியலாளர்.
யாழ்ப்பாணப் பிரதேசம்.

இலங்கை மின்சாரசபை,
சுன்னுகம்.
1988-08-29 (C 6469)



# சாவகச்சேரியில்

Data Processing and Computer Programming in

BASIC LANGUAGE

DURATION — 3 Months Fees 1250/-
கல்வித்தகைமை: — G. C. E. (O/L)

ஆரம்பம்: 5-9-1988 திங்கள்
10-00 a. m.

ABLE TECHNICAL STUDIES
C/o SCIENCE CENTRE
Post Office Rd
CHAVAKACHCHERI.

(6050)



உ
சிவமயம்

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!!
நிகழும் விபவ வருடம் ஆவணி மாதம் 20ஆம் நாள் (05-09-1988) திங்கட்கிழமை காலை 9-45 மணி முதல் 12-00 மணி வரை வரும் சுபமுகூர்த்த வேளையில்.

எனது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
இரங்கநாதன்
அவர்களுக்கும்

எனது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
சாரதாதேவி
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் யாழ்ப்பாணம் அரசடி விநாயகர் ரசிகரஞ்சன சபா மண்டபத்தில் (மணிக்கூட்டு வீதி) திருமணம் நடைபெற நிச்சயித்திருப்பதால்

அத்தருணம்
உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவரும் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம்

★ அன்புடன் அழைக்கின்ருேம் ★
(தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை)

தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி செல்வநாயகி நடராசா
திரு. திருமதி ந. அம்பலவாணர்
திரு. திருமதி வ. சிவராசா
"இரங்க வாசா"
பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

முகாந்தரம் க. துரையப்பா
(Retired A. D. R.)
திருமதி துரையப்பா
29/2, உடையார் ஒழுங்கை,
ஐயனர் கோயிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(6081)


# வதிவிட அத்தாட்சிப் பத்திரம் இல்லாத மக்கள் அவதி

கோப்பாய் செப் 2

யாழ் குடாநாட்டில் வதிவிட அத்தாட்சிப் பத்திரம், நற்சான்றுப் பத்திரம் என்பன போதியளவு இல்லாததால் கிராம சேவையாளர்களினுல் அவற்றை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனுல் நேர்முகபரீட்சைக்குப் சமுகம் அளிப்பவர்களும், பாஸ்போர்ட்டுக்கு விண்ணப்பிப்பவர்களும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

இப் பத்திர புத்தகங்கள் யாழ் அரச செயலகத்தினுல் விநியோகிக்கப் பட்டு வருவது வழக்கம்.

தற்போது உள்ள சூழ்நிலையில் கொழும்பு அரச அச்சகத்திலிருந்து தருவிப்பதில் சிரமம் ஏற்பட்டதினுல் யாழ் செயலகத்தினுல் போதியளவு பத்திரங்களை வழங்க முடியாத நிலைமை இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-72)

## பிள்ளையாரின் வெண்கல அங்கி மாயம்!

யாழ்ப்பாணம் செப்.2

ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதியில் உள்ள பிள்ளையாரின் வெண்கல அங்கியைக் காணவில்லை.

இது தொடர்பாக யாழ் பொலீஸ் பிரிவில் முறையிடப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை குளப்பிட்டி வீதியில் உந்துமாங்கப் பிள்ளையார் எனும் ஆலயம் ஒன்று இருக்கிறது.

அந்த ஆலயத்தில் குடிகொண்டிருக்கும் விநாயகப் பெருமான் அணிந்திருந்த வெண்கலத்திலான அங்கியைத்தான் விஷமிகள் திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த 26 ஆம் திகதி இரவு ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த நேரத்தில் இத்திருட்டுச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது (ஒ-10)

## அந்த சேவை நிறுத்தப்படும்

யாழ்ப்பாணம், செப் .2

தற்பொழுது யாழ்ப்பாணம் - பருத்தித்துறை ஆகிய பகுதிகளுக்கிடையே சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வரும் கடுகதி இடைத்தர சொகுசு பஸ் சேவை நிறுத்தப்பட உள்ளது.

இந்த பஸ்ஸைக் கொண்டு கொழும்பு பஸ் சேவையை ஆரம்பிக்க உள்ளதாலேயே இந்த சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட உள்ளதாக அறியவருகின்றன.(ஒ-9)

# மணிப்புரி மக்களுக்கு கடன் வழங்கும் திட்டம்

## ஐக்கிய நாணய சங்கம் ஏற்பாடு

கொழும்புத்துறை மணிப்புரி ஐக்கிய நாணயச் சங்கத்தில் சேர்ந்து கொள்ளும் மணிப்புரி மக்கள் சகல கடனுதவிகளும் பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

மணிப்புரி ஐக்கிய நாணய சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் மணிப்புரி 8 ஆம் குறுக்கு வீதியில் உள்ள கலைமகள் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

சங்கத் தலைவர் ரூ. எமிலியானுஸ் பிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தை யாழ் சிங்களக் கடன் கூட்டுறவுச் சமாசத் தலைவர் திரு. ஞானப்பிரகாசமும் தேசிய வீடமைப்பு அதிகார சபை அலுவலகர் திரு.சார்ள்ஸூம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்கள்.

சங்கத்தின் தலைவராக திரு. எமிலியானுஸ் மீண்டும் தெரிவு செய்யப் பட்டார். (க-5)

# கட்டடப் பொருள் உற்பத்தியாளர்களுக்கு கெயர் கடன் உதவி

காங்கேசன்துறை. செப்.2

வன்செயலால் பாதிக்கப் பட்ட கட்டடப்பொருள் உற்பத்தியாளர்களுக்கு கடன் வழங்க கெயர் ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

வன்செயல் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட கட்டிடப் பொருள் உற்பத்தியாளர்கள் தம் தொழிலை மீண்டும் தொடர முடியாது கஷ்டப்பட்டு வருகின்றனர்,

இதை அடுத்து குறைந்த வட்டியுடன் கடன் உதவி செய்ய கெயர் ஸ்தாபனம் முன்வந்துள்ளது:

இத்திட்டப்படி கடன் பெற விரும்புபவர்கள் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கியுடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்பட்டுள்ளது. (இ-68)

# நல்லை ஆதீனத்தின் பீடாரோஹண விழா

யாழ்ப்பாணம், செப்.2

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகளது 22 ஆவது ஆண்டு பீடாரோஹண விழா இன்று 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இன்றைய நிகழ்ச்சிகள் காலை 6.30 மணிக்குத் திருமுறைப்ப ஜனை, பூசை முதலியவற்றுடன் ஆரம்பமாகும். தொடர்ந்து பீடாபிஷேகம், கொலு பூசை, பட்டணப்பிரவேசம் ஆகியன இடம் பெறும்.

பிற்பகல் 2 மணிக்குப் பெரியபுராண படனப் பூர்த்தியும், திருவிளையாடற்புராண படன ஆரம்பமும், திருமுறை முற்ருேதல் ஆரம்பமும் நிகழ உள்ளது.

மேலும், திரு.ச தங்கமா மயிலோனின் 'நல்லைக் கந்தன்தோத்திரங்கள்' என்னும் நூல் வெளியீடும் இவ்விழாவில் இடம் பெறுகிறது. (அ)

## சங்கிலித் திருடன்

பலாலி, செப் 2

தனியாகச் சென்று கொண்டிருந்த இளம் பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற வாலிபர் பொதுமக்களால் துரத்திப் பிடிக்கப் பட்டு நையப்புடைக்கப் பட்டார்.

ஏழாலை வடக்கைச் சேர்ந்த செல்வி சிவதர்சினி சிவராசசிங்கம் என்வர் கொக்குவில் சம்பியன் வீதியிலுள்ள தனது மாமனுரின் வீட்டுக்குச் சென்று வரும் போதே இச்சம்பவம் நிகழ்ந்தது. (இ-119)

## கோயிலில் களவு

கோப்பாய் மத்தி முத்துமாரி அம்மன் கோவிலின் சிலை மூலஸ்தானத்தில் இருந்து உடைக்கப்பட்டு அதிலுள்ள இயந்திரத் தகடும், அம்மனின் ஆபரணங்களும் களவாடப் பட்டுள்ளன. (இ-72)

# மந்திகை ஆஸ்பத்திரியில்

வடமராட்சி, செப். 2

நெடுங்கேணியில் தாக்கப்பட்ட நாராயணசாமி அழகேஸ்வரன் (வயது 8) என்பவர் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நெடுங்கேணி, ஒடை வெளி பிரதான வீதியில் வெடிக்க வைக்கப்பட்ட கண்ணிவெடியைத் தொடர்ந்து அதன் சுற்றுடலில் உள்ள பொது மக்கள் பலத்த தாக்குதலுக்குள்ளாகினர் என்றும்

பலர் நெடுங்கேணி முகாமில் இன்னமும் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-160)

# பருத்தித்துறை பிரசைகள் குழு அடையாள உண்ணுவிரதம்

வடமராட்சி, செப், 2

பூஸா அரசியல் கைதிகளின் சாகும் வரையிலான உண்ணு விரதத்துக்கு ஆதரவு தெரிவித்து பருத்தித்துறை பிரசைகள் குழு நாளை 3 ஆம் திகதி சனிக்கிழமை ஒரு நாள் அடையாள உண்ணு விரதம் மேற்கொள்ளவுள்ளது.

சனிக்கிழமை காலை 8. 00 மணி தொடக்கம் மாலை 4. 00 மணி வரை பருத்தித்துறை சிவன் கோயிலில் பிரசைகள் குழுத் தலைவர் எஸ் விசாகசுந்தரம் தலைமையில் இந்த அடையாள உண்ணுவிரதம் நடைபெறும். (இ - 160)

## நாடகப் பட்டறை

பருத்தித்துறை செப்-2

பருத்தித்துறை யதார்த்தா கலை இலக்கிய வட்டம் நாடகக்கலையை வளர்க்கும்முகமாக பருத்தித்துறையில் நாடகப் பட்டறை ஒன்றை ஆரம்பித்துப் பயிற்சி வகுப்புக்களை நடத்தவுள்ளது.

இந் நாடகப்பட்டறையில் ஈழத்தின் தமிழ் நாடக வல்லுனர்கள் பயிற்சிகளை வழங்கவுள்ளனர். (இ-118)

## படையினர் தேடுதல்

யாழ்ப்பாணம், செப் 2

நல்லூர், கல்வியங்காடு, நாயன்மார்கட்டுப் பகுதிகளில் செவ்வாயன்று அமைதிப்படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன் காரணமாக சகல வாகனப் போக்குவரத்துச் சேவைகளும் ஆடியபாதம் வீதி, கோவில் வீதி, பலாலி வீதி ஆகியவற்றினுடாக இடம்பெற்றன.

பொதுமக்கள் பலர் சந்திகளில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

எனினும் நன்பகலுக்குப் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது. (ஒ-10)


# டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




Grant BJK&E PFL 1157

'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள், அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லி.

Pfizer

சில்லறை விலை ரூ.39/90 200 மி. லி.

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


# உறுதியான கொள்கை இல்லாதது சுதந்திரக் கட்சி

## ருக்மன் சேனநாயக்கா தாக்கு

கொழும்பு, செப் 2

தேசியப் பிரச்சினைகளில் உறுதியான கொள்கை இல்லாத கட்சி சுதந்திரக் கட்சி.

இந்திய-இலங்கை உடன்பாட்டின் சூத்திர தாரிகளில் ஒருவரான ரோனி டிமெல்லை கட்சியில் சேர்த்ததன் மூலம் இது புலப்படுகிறது.

ஐக்கிய இலங்கை மக்கள் கட்சித் தலைவர் ருக்மன் சேனநாயக்கா இதனைத் தெரிவித்தார்.

மத்துகம என்னுமிடத்தில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் திரு. சேனநாயக்கா பேசினுர்.

அவர் மேலும் பேசுகையில் "ரோனி டிமெல்லைக் கட்சியில் சேர்த்ததன் மூலம், மக்களின் நம்பிக்கையை சுதந்திரக் கட்சி இழந்து விட்டது" என்ருர். (-எ)

## அடுத்த கப்பல் செப்.7 இல் வரும்

யாழ்ப்பாணம் செப்.2

இந்தியாவில இருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்றிவரும் அடுத்த கப்பல் செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி வரும் என்று எதிர் பார்க்கப் படுகின்றது.

மேற்படி கப்பல் மன்னுருக்கு வருமா அல்லது காங்கேசன் துறைக்கு வருமா என்று இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றும்—

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த அநேகமானேர் அக்கப்பலில் வர இருப்பதால், காங்கேசன்துறைக்கே பெரும்பாலும் கப்பல் வரும் என்றும்— [illegible] கப்பலின் [illegible] தெரிவிக் [illegible] (இ-9)

## வெளியீட்டு விழா

கோப்பாய், செப். 2

"புத்தெழில்" மாத சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அச்சுவேலி [illegible] நடைபெறும். (இ-79)


# லங்கா ஆயுர்வேத வைத்தியக்கல்லூரி

D. A. M இறுதி வருடப் பரீட்சை

19 - 9 - 1988

பரீட்சை நேரசூசிகை பின்வருமாறு:

| திகதி | நேரம் | பாடம் |
|---|---|---|
| 19-9-88 | 9—12 | நிதானம் (எழுத்து) |
| | 1—4 | ,, (வாய் முறை) |
| 20-9-88 | 9—4 | ,, (வாய் முறை) |
| 21-9-88 | 9—12 | சிகிச்சை (எழுத்து) |
| | 1—4 | ,, (வாய் முறை) |
| 22-9-88 | 9—4 | ,, (வாய் முறை) |
| 23-9-88 | 9—12 | ரோக விஞ்ஞானம் (எழுத்து) |
| | 1—4 | ,, (வாய் முறை) |
| 24-9-88 | 9—4 | ,, (வாய் முறை) |
| 26-9-88 | 9—12 | ஸ்திரீ ரோகம் (எழுத்து) |
| | 1—4 | ,, (வாய் முறை) |
| 27-9-88 | 9—4 | ,, (வாய் முறை) |
| 28-9-88 | 9—12 | பாலரோகம் (எழுத்து) |
| | 1—4 | ,, (வாய் முறை) |
| 29-9-88 | 9—4 | ,, (வாய் முறை) |
| 30-9-88 | 9—12 | மகப்பேற்றியல் (எழுத்து) |
| | 1—4 | ,, (வாய் முறை) |
| 1-10-88 | 9—4 | ,, (வாய் முறை) |

பதிவாளர்
லங்கா ஆயுர் வேத வைத்தியக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(6096)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோந்து நடவடிக்கைகளில் இருந்து ஸ்ரீலங்கா பொலீஸாரை வாபஸ் பெறுக

## திருமலை அன்னையர் முன்னணி இந்திய அமைதிப்படைக்கு மகஜர்

திருகோணமலை, செப் 2 ''ரோந்து நடவடிக்கைகளில் இருந்து ஸ்ரீலங்கா பொலீஸாரை வாபஸ் பெறுக''.

திருகோணமலை அன்னையர் முன்னணியினர் கிழக்குப் பிராந்திய பொது ஆணை அதிகாரியான மேஜர்-ஜெனரல் ஜமீல் மொகமட்டுக்கு அண்மையில் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

அதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்னையர் முன்னணியின் தலைவி, திருமதி ஈஸ்வரி மாரிமுத்து, செயலாளர். திருமதி திலகவதி ரெங்கசாமி ஆகியோர் கையொப்பமிட்டு கையளிக்கப்பட்ட மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது:-

இலங்கை- இந்திய சமாதான உடன்படிக்கையின் கீழ் இந்திய அமைதி காக்கும் படை வருகை தந்ததிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் திருகோணமலை நகரத்தில் ஸ்ரீலங்கா பொலீஸ் கண்டபடி துப்பாக்கிச் சூடு நடத்தியது. இச் சம்பவங்களின் போது தமிழ் பேசும் சமூகத்தினரைச் சார்ந்த பலர் காயமுற்றோ கொல்லப்பட்டோ உள்ளனர்.

இவை எமதுஊகப்படி தமிழ் பேசும் மக்களும், சிங்கள மக்களும் கொல்லப்படும் அல்லது காயப்படுத்தப்படும் குண்டு வெடிப்பு அல்லது கைக்குண்டு வீச்சுகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எதிர்த்தாக்குதல் நடவடிக்கைகளாகும்.

தமது ஆயுதங்களை ஒப்படைக்க விரும்பாத தமிழ் போராளிகளோடு சண்டையிடுவதிலும் அவர்களது ஆயுதங்களைக் களைவதிலும் உற்சாகமாக இந்திய அமைதிப் படை ஈடுபட்டிருக்கையில் தமிழ்ச் சமூகத்தினர் மீண்டும் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினராலும், கோட்டைக்குள்ளேயும், வெளியேயும் பாதுகாப்பளிக்கப் பட்ட சிங்கள மக்களாலும் உயிர் ஆபத்தை எதிர் நோக்க வேண்டியுள்ளது கவலைக்குரியதாகும்.

தமிழ் பேசும் மக்களின் நலன்களைப் பேணுவதற்காக உடனடியாக கீழ் கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

★ ரோந்து நடவடிக்கையில் அல்லது நிலையாக நின்று காவல் புரியும் நடவடிக்கையில் இருந்து சகல ஸ்ரீலங்கா பொலீஸாரையும்வாபஸ் பெற வேண்டும்.

★ பிரெட்ரிக் கோட்டைக்குள்ளேயும். அதன் சுற்றுடல்களிலும் கோட்டைக்கு வெளியேயும் உள்ள சிங்கள அகதிகள் அனைவரையும் வெளியேற்ற வேண்டும்.

★ கச்சேரிக்கு அலுவல்களைக் கவனிப்பதற்கும் உத்தியோக பூர்வ கடமைகளைச் செய்வதற்கும் செல்லும் சகல தமிழ் பேசும் மக்களுக்கும் கோணேஸ்வரர் ஆலயத்திற்கு வழிபாட்டுக்குச் செல்வோருக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும். (இ-150)

வடக்கு -கிழக்கு மாகாண. ச. தேர்தல்

# கொழும்பில் அவசரமாநாடு

கொழும்பு, செப்.2 வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த உதவித் தேர்தல் ஆணையாளர்களைத் தேர்தல் ஆணையாளர் அவசரமாகக் கொழும்புக்கு அழைத்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கவே சம்பந்தப்பட்டவர்கள் அழைக்கப்பட்டிருப்பதாகத்தெரியவருகிறது. இது சம்பந்தமாக ஒருமாநாடு நடைபெறவுள்ளது.

இதேவேளை திர்வரும் அக்டோபர் மாதத்துக்கும் டிசம்பர் மாதத்துக்கும் இடையில் மூன்று தேர்தல்களை நடத்துவதற்கான நடவடிக்கைகளைத்தேர்தல் ஆணையாளர் திணைக்களம் பூர்த்தி செய்திருக்கிறது.

வடக்கு,கிழக்கு மாகாணசபைத் தேர்தல்,ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் என்பனவே அந்தமூன்று தேர்தல்களுமாகும். (ஒ-ஐ)

## கைதிகளின் உருக்கமான ஒரு கடிதம்

யாழ்ப்பாணம், செப்.2 வாழ்க்கை வாழ்வதற்கே. தடுப்பு முகாம்களில் கழிப்பதற்காக அல்ல. நாம் தற்போது மேற்கொண்டுள்ள உண்ணாவிரதத்தில் இறந்து போக நேரிடலாம். ஆனால் அந்த மரணம் மற்றவர்களின் வாழ்விற்கு வழிகோலுமானால் அதனையிட்டு நாம்எமது வாழ்வின் பலனை அடைந்து விட்டதாகப் பெருமிதம் அடைவோம்.

இவ்வாறு பூஸா தடுப்பு முகாமில் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் அரசியல் கைதிகள் யாழ். ஆயருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (ஒ-9)

## அடையாளம் காணப்பட்டது

கல்வியங்காட்டில் கடந்த திங்கட்கிழமைநடைபெற்ற சம்பவத்தில் மரணமான இளைஞரின் சடலம் உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டது.

அரியாலையைச்சேர்ந்த சிவபாலன் வாமன் என்ற இளைஞர் இவர் ஆவார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணை யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்றது. (ஒ-10)

காரைநகரில்

# கம்பன் விழா இன்று ஆரம்பம்

காரைநகர் செப் 2 காரைநகரில் இன்று கம்பன் விழா ஆரம்பமாகிறது.

காரைநகர் யாழ்ரன் கல்லூரிக்கலையரங்கத்தில் இன்று முதல் 4-ஆம் திகதி வரை விழா நடைபெறும்.

காரைநகர் கம்பன் கழகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் கீழே தரப்பட்டுள்ளன.

முதலாம் நாள் நிகழ்ச்சிகள் நேற்றைய உதயனில் வெளிவந்தன.

### இரண்டாம் நாள் நிகழ்ச்சி

பிரம்மஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் திரு. மு. பரமலிங்கம் மங்கல விளக்கேற்றல்.

விழாவுக்கு திரு. நா. சோமகாந்தன் தலைமை வகிப்பார்.

தொடக்க உரை பண்டிதை பொன்பாக்கியம் காலை 9-45 ''மணிகலை தெரி அரங்கம்''

கலாநிதி வித்துவான் வேலன் தலைமை வகிப்பார்.

(1) 'உறவே பகையானது' கலாநிதி நா. சுப்பிரமணியஐயர்

(2) 'பகையே உறவானது' திரு. க. நாகேஸ்வரன்

(3) 'எதை எதை வியப்பம் எனவரு வளப்பம்' பேராசிரியர் அ. சண்முகதாஸ் (யாழ்பல்கலைக் கழகம்)

(4) 'அனுமன் பெருமை அனைத்தும் அருமை' வித்துவான் மு.சபாரத்தினம் ஆகியோர் வழங்குவார்கள்.

திரு. க. சிவபாதம் திரு மா. நடராசா மங்கள விளக்கேற்றல்.

### இரண்டாம் நாள் மாலை நிகழ்ச்சி

திரு. எஸ். சிதம்பரநாதன் குழுவினரின் மங்கள இசையுடன் மாலை 3.30 மணி அளவில் விழா ஆரம்பமாகும்.

வைத்திய கலாநிதி எஸ். நாகநாதர் தலைமை வகிப்பார்.

தொடக்கவுரை கவிஞர் நாவண்ணன்.

'படைத்தவனைச் சந்திக்கும் பாத்திரங்கள்'' என்ற நிகழ்ச்சி.

படைத்தவனா- புலவர் ஈழத்துச் சிவானந்தன் கைகேயியாக-திரு, சே.ப. பத்மநாதன் பரவனாக- திரு. காரை. செ. சுந்தரம்பிள்ளை குகனாக-திரு. இ. முருகையன் இராவணனாக கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை

அதனைத்தொடர்ந்து 'தெய்வக்கற்பினள்' என்னும் தலைப்பில் இ. ஜெயராஜ் சொற்பொழி வாற்றுவார். (சி-73)

## அரசாங்க அதிகாரிக்கு கொழும்பில் இருந்து வந்த திடீர் திருப்பி அழைப்பு!

யாழ்ப்பாணம், செப் 2 இப்போது யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வரும் ஆரம்ப ஆசிரியர்களுக்கான சேவைக்கால முன்பயிற்சியை மேற்பார்வையிட இங்கு வந்த - முன்னாள் யாழ் பிரதேச கல்விப் பகுதியின் உயர் அதிகாரி ஒருவர் அவசரமாக அமைச்சினால் திருப்பி அழைக்கப்பட்டாராம்

இதுகுறித்து தெரிய வருவதாவது:-

மேற்படி பயிற்சியை மேற்பார்வை செய்வதற்கான மேலிடத்து அனுமதியுடன் மேற்படி முன்னாள் உயர் அதிகாரி யாழ்ப்பாணம் வந்தாராம்.

ஆனால் வெளிநாடு சென்றிருந்த சம்பந்தப்பட்ட அமைச்சர் நாடு திரும்பியதும் இந்த விடயத்தை அறிந்து சீற்றங் கொண்டாராம்.

அத்துடன் அந்தஉயர் அதிகாரியை மீண்டும் உடனடியாக கொழும்பில் கடமைக்குத் திரும்புமாறு உத்தரவிட்டாராம்.

மேற்படி அவசர உத்தரவு தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலம் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிக்கு அறிவிக்கப் பட்டதாம்.

இதேவேளை மேற்படி கல்விப் பணிப்பாளருக்கு -வடமாகாண - குறிப்பாக யாழ் மாவட்ட பாடசாலை விவகாரங்களில் எந்தவித தொடர்பும் வைத்திருக்கக் கூடாது என ஒரு நிலையான உத்தரவு (Standing Order) ஏற்கனவே அமைச்சரினால் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. (ஒ-க)

## அமெ. இராணுவ அதிகாரி கொழும்பில்

அமெரிக்க இராணுவத்தின் மேற்குப்பிரிவு பொறுப்பு அதிகாரி லெப். ஜெனரல் சார்ள்ஸ் டபிள்யு பக்லுல் கொழும்பு வந்திருக்கிறார்.

இலங்கை இராணுவ அதிகாரிகளுடனும்அவர் பேச்சுக்களை நடத்துவார் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது (எ)

## 10 ஆம் திகதி இறுதிநாள்

ஆசிரியர் கலாசாலைகளில், ஆசிரியர் கல்விப் பயிற்சிநெறியைப் பயிலுவதற்காக ஆசிரியர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

மேற்படி விண்ணப்பம் 12-08-1988 ஆம் திகதிய இலங்கை வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்கள் நடைபெறும் இப்பயிற்சி நெறிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 10 ஆம் திகதியாகும். (ஒ-க)

## 'கடுவால்' திரும்பியது

யாழ்ப்பாணம், செப். 2 இந்திய அமைதிப் படையினரின் 'கடுவால்' படை பிரிவு இலங்கையில் தமது 10 மாதப் பணியை முடித்துக் கொண்டு இந்தியா திரும்பியுள்ளது.

நாடுதிரும்பிய படைப் பிரிவை அமைதிப்படை தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் சென்னையில் வரவேற்றார். (ஒ-6)

# மயிலிட்டியில் மீனவர்கள் நடத்திய உண்ணாவிரதம்

காங்கேசன்துறை, செப்2 மூன்று கோரிக்கைகளை முன்வைத்து மயிலிட்டியைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான மீனவர்கள் நடத்திய உண்ணாவிரதப் போராட்டம் அமைதிப்படை அதிகாரிகளின் கோரிக்கையை அடுத்து கைவிடப்பட்டது.

மயிலிட்டித்துறை முகத்தில் அமைதிப் படை முகாம் முன்பாக ஆயிரக்கணக்கான மீனவர்கள் காலை 8 மணி முதல் உண்ணாவிரதம் நடத்தினார்கள்.

அங்கு வந்த அமைதிப் படை அதிகாரிகள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியவர்களுடன் நடத்திய பேச்சை அடுத்து, நண்பகல் ஒரு மணியளவில் போராட்டம் கைவிடப்பட்டது.

மயிலிட்டித்துறை பிரசைகள் குழு, மயிலிட்டி கிராமிய கடற்றொழிலாளர்கள் சமூக அமைப்பு ஆகியவற்றின் சார்பில் நடந்த இப் போராட்டத்தில் இரவு நேர மீன் பிடிக்கும் அனுமதி வழங்க வேண்டும், விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி சுமுகமான நிலையை ஏற்படுத்த வேண்டும், தீவுப் பகுதியில் மீன் பிடிக்க அனுமதிக்கவேண்டும், என்ற மூன்று கோரிக்கைகளை முன்வைத்தனர்.

ஒரு வாரத்தில் உயர் அதிகாரிகளுடன் பேசி சுமுகமான பதிலை அறிவிப்பதாக அமைதிப் படை அதிகாரிகள் தெரிவித்ததை அடுத்து உண்ணாவிரதம் முடிக்கப்பட்டதாகப் பிரசைகள் குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர். [ஒ-68]


யாழ் மாநகர
தெங்குப் பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

யா. மா. தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கத்தில் பின்வரும் பதவி வெற்றிடம் உள்ளது. இதற்கான விண்ணப்பங்களை 10-9-1988ஆம் திகதிக்கு முன்னர் பொது முகாமையாளர் யா. மா. தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம் 330. K K S. வீதி யாழ்ப்பாணம் என முகவரியிட்டு அனுப்புதல் வேண்டும்.

பொது லிகிதர் தரம் 302 - 13

தகைமைகள்:

1. இரண்டு வருடங்களுக்குக் குறையாத (கூட்டுறவு ஊழியர் 302-14 சம்பளத்தில்) பொது லிகிதர் அனுபவம்
2. க. பொ.த. (சாதாரண தரம்) கணிதம்/ வர்த்தக கணிதம்/ எண் கணிதம், தமிழ் ஆகியவற்றில் திறமைச்சித்தி உட்பட 5 திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி.

சம்பள அளவுதிட்டம்:

225 — 395
10 x 7 — 12/50 x 8

குறிப்பு:

ஆங்கில தட்டெழுத்துத் தெரிந்தவர்களுக்கும் சங்க எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப் படும்.

— பொதுமுகாமையாளர்.

(C-6459)



திறந்த பல்கலைக் கழகத்தின் பட்டமேல்

## கல்வி டிப்புளோமா

இப் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டோருக்கான

## விசேட பயிற்சி வகுப்புகள்

முன்னணி விரிவுரையாளர்களான
திரு. நல்லையா, திரு. துரைராஜா
திரு. பேனடிக்பாலன்
ஆகியோரின் இணைந்த சேவை

ஆரம்பம்: 3-9-1988

- இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
- வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் பிற்பகல் 1-00 மணிமுதல் — 4-00 மணி வரை
- பகுதி I, பகுதி II, ஆகியவற்றிற்கான புதிய பாடத்திட்டங்கள்
- கட்டணம் ரூபா 180. 00 (மாதாந்தம்)

விபரங்களுக்கு: நேரில் / தபாலில்

ASTAN INSTITUTE
166/1, Hospital Road, JAFFNA.
(A S சுந்தரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)

(C-6264)



★ கீன் சென்ரர் ★
திருநெல்வேலி

A/L 89-90

வர்த்தகம் — ஜெயராமன்

90 - சனி, ஞாயிறு — 10-00 — 11-00 a m
89 - சனி, ஞாயிறு — 11-00 — 12-00 a. m.
நடைபெறுகின்றது.

A/L 90 கலை, வர்த்தகம்
புதிய பிரிவு ஆரம்பம்: 03-09-88
சனி 7-00 a. m.

(C-6453)


## 31-ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி மகேஸ்வரி ஆறுமுகம்
(கனகம்மா)

| மண்ணுலகம் | விண்ணுலகம் |
|---|---|
| 21-02-1931 | 02-08-1988 |

அன்பாய், பண்பாய், பாசமாய் எம்முடன் இருந்து எம்மை விட்டுப் பிரிந்த அன்பின் தீபமே! நாட்கள் பலவானாலும் உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களை விட்டு அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரன்மார், பேத்திமார்.

ஸ்ரேஷன் வீதி,
வவுனியா.

(6275)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டி சபிண்டீகரண
அழைப்பிதழும் நன்றி நவிலலும்



திரு: கணபதிப்பிள்ளை நாகலிங்கம்
(மலாயன் பென்ஷனர்)

தோற்றம்: 1-9-1901 மறைவு: 4-8-1988

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய் எங்கள் குடும்பத்தின் தலைவராய் வாழ்ந்து வழிகாட்டிய அன்புத் தெய்வத்தின் ஈமக்கிரியைகளிற் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள்அனுப்பியவர்களுக்கும் ஏனைய உதவிகள்புரிந்தவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை கீரிமலையில் 2-9-1988 இன்றும், சபிண்டீகரணம் எமது இல்லத்தில் 3-9-1988 சனிக்கிழமை அன்றும் நடைபெறும். இவ்வைபவங்களில் கலந்து கொள்ளுமாறு உறவினர் நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

கோண்டாவில்
மேற்கு.

(6278)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வது அரண்.

**பொருள்:**

முற்றுகையிடுவதில் வல்லமை கொண்டு முற்றுகை இட்டவரையும், (உள்ளிருந்தவர் பற்றிய) பற்றை விடாமலிருந்து வெல்வதற்கு உரியது அரண் ஆகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073

02-9-1988 த. பெ. இல. 23


## பகற் கொள்ளையும் பச்சைத் துரோகமும்!

இலங்கை அரசாங்கத்தின் ஆகப் பிந்திய தமிழ் மண் பறிப்பு நிகழ்ச்சி வெலி ஓயாத் திட்டமாகும். யுத்த நிறுத்தம், சமரசம், சமாதானம் சனநாயகத்தை நிலைநாட்டுதல் ஆகிய விடயங்களைப் போல வெலி ஓயாவும் தமிழர்களின் தற்போதைய முக்கிய, முன்னணிப் பிரச்சினைகளில் ஒன்றாகி விட்டது.

இது குறித்து ஏற்கனவே பல தடவைகள் இப்பத்தியில் கருத்துரைத்துள்ளோம். அரசாங்க உதவியுடன், அரசாங்கப் படைகளின் பாதுகாப்புடன் தமிழர் மண் பறிப்பு கனகச்சிதமாக நடந்து வருகின்றது.

வடக்கு என்றும், கிழக்கு என்றும் தமிழ்ப் பகுதி எங்கும் மக்கள் தங்கள் எதிர்ப்பை, ஆட்சேபத்தை, கண்டனத்தை இயன்ற வழிகள் மூலம் எல்லாம் தெரிவித்த போதிலும் மணல் ஆறு என்ற பாரம்பரிய தமிழ்ப் பிரதேசம், சிங்களவர் குடியேற்றமாக மாற்றப் பட்டு வருகிறது.

ஆகப்பிந்தி, ஈரோஸ் இயக்கம் இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றுக்கு வெலி ஓயா சம்பந்தமாக அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தகவல் எவரையுமே திடுக்கிட வைக்கும்!

அதாவது வெலி ஓயாத் திட்டத்தை பூரணப்படுத்துவதற்காக, தமிழர்களை அவர்களது பாரம்பரிய பூமியிலிருந்து பலவந்தமாக அகற்றுமாறு அரசாங்க அதிகாரிகளுக்கு மேலிடத்தில் இருந்து கண்டிப்பான உத்தரவு போயிருக்கிறது என்பதே அந்தத் திடுக்கிடும் தகவலாகும்.

சிங்களக் குடியேற்றம் குறித்துப் பேசினால்—

கொழும்பில் தமிழர்கள் வீடு கட்டி வாழலாம், சிங்களவர்கள் யாழ்ப்பாணத்தில் வாழக் கூடாதா என்று கேட்டவர்கள், கேட்பவர்கள் பலர்.

பிரசை ஒருவன் தனது சொந்தப்பணத்தில் எங்காவது காணி வாங்கி வீடு கட்டுவது அவனது தனிமனித உரிமை. ஆனால் அரசாங்கமே ஒரு இனத்தின் பிரதேசத்தில் இருந்து அந்த இனத்தைப் படைபலத்தால் பலவந்தமாக அகற்றிவிட்டு, இன்னொரு இனமக்களைக் குடியேற்றுவது அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும்.

இலங்கை அரசாங்கத்தின் இந்த அநியாயத்துக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட வேண்டும். ஐ நா. வில் கண்டனக் குரல் எழுப்பப்பட வேண்டும்.

வடக்கும் கிழக்கும் தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடம் என்று ஒப்புக் கொண்டு ஒப்பந்தம் ஒன்றை எழுதிய பின்னரும்—

அரசாங்கமே, தமிழர்களை அவர்களது சொந்த மண்ணிலிருந்து பலவந்தமாக வெளியேற்றி அந்த இடத்தைச் சுவீகரித்துப் பின்னர் சிங்களவர்களைக் குடியேற்றுவது பகற் கொள்ளைக்கு ஒப்பாகும்

ஒப்பந்தத்துக்கும் அதில் சேர்ந்து கையெழுத்திட்ட இந்தியாவுக்கும் செய்யும் பச்சைத் துரோகமும் ஆகும்.

வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் பிரகடனத்தைத் தாம் விரைவில் வெளியிடப் போவதாக அதி உத்தமர் ''பெருந்தகை'' தமது ஆளுங்கட்சி கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்! என்னே பகட்டு!!

வெலி ஓயாத் திட்டத்தைத் தீவிரமாக அமுல் செய்து, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இருந்து தமிழர்களை அப்புறப்படுத்தி, வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் துண்டத்தை சுவீகரம் செய்து சிங்களப் பிரதேசமாக்கினால், வடக்கு-கிழக்கு ஒன்று சேர்வது செயல் ரீதியாக இயலாத காரியமாகிவிடும்.

அதற்காகத் தான் ஜனாதிபதி வடக்கு கிழக்கு இணைப்புப் பிரகடனத்தை இயன்றவரை பின்போட்டு வருகிறாரோ என்ற சந்தேகமும் எழுகிறது. அந்தச் சந்தேகம் இலங்கை இந்திய ஒப்பந்தம் மீது தமிழ் மக்களுக்கு நிச்சயமாகச் சந்தேகத்தை ஏற்படுத்தும்.

தனது சொத்தை தன் கண் முன்னாலேயே பிறன் ஒருவன் களவாடிச் செல்வதை கைகட்டி, வாய்பொத்திப் பார்த்து நிற்கும் நிலை தமிழனுக்கு! அவனது பாதுகாவலனாக வந்தவரும், ஆபத்பந்தவராக வந்தவரும் பேசாமடந்தையாக, வாய்மூடி மௌனியாகப் பார்த்து நிற்பதும் பகிடிக்கிடமானது

இலங்கை அரசின் இந்த பகற் கொள்ளையும், பச்சைத் துரோகமும் உலகத்துக்கு அப்பட்டமாகத் தெரியப்படுத்தப்பட வேண்டியவை.

---

நச்சுக் கழிவுப் பொருளுடன்

# கடலில் அலைந்து திரியும் கப்பலை பிரெஞ்சு யுத்தக்கப்பல் பின்தொடருகிறது!

## பிரெஞ்சு அரசும் அனுமதி மறுப்பு

லண்டன், செப்1

2 ஆயிரம் மெட்ரிக் தொன் நச்சுப்பொருளை ஏற்றி வைத்துள்ள மேற்கு ஜேர்மன் சரக்குக் கப்பல் இப்போது ஹொலந்து நாட்டில் உள்ள துறைமுகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

ஆங்கிலக் கால்வாய் துறைமுகம் ஊடாக பிரிட்டனில் உள்ள பிளிமவுத் துறைமுகத்தில் நச்சுக் கழிவுப் பொருளை இறக்க இக்கப்பல் முயற்சித்தது. அதற்குப் பிரிட்டிஷ் அரசு அனுமதியளிக்க மறுத்து விட்டது.

அதன் பின்னர் இக்கப்பல் பிரெஞ்சுத்துறைமுகத்துக்குச் சென்றது.

பிரெஞ்சு அரசும் தனது துறைமுகத்தினுள் பிரவேசிக்க அனுமதிக்கவில்லை.

இப்போது கப்பல் ரொட்டர்டாம் துறைமுகம் நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

கப்பல் எங்கு செல்கிறது என்பதை வேவு பார்த்து பிரெஞ்சுக் கடற்படைக் கப்பல்கள் இரண்டு செல்கின்றன என்று பிபிசி அறிவித்தது.

இக்கப்பல் கொண்டு செல்லும் நச்சுக் கழிவுப் பொருள் முதலில் நைஜீரியாவில் கொட்டப்பட்டது. நைஜீரியா அரசின் உத்தரவின் பேரில் அதனை மீண்டும் ஏற்றிக் கொண்ட இக்கப்பல், அதனைக் கொட்ட முடியாமல் கடலில் அலைந்து திரிகின்றது

இக்கப்பல் பிரவேசிக்க இத்தாலி, ஸ்பெயின், மேற்கு ஜேர்மனி ஆகிய நாடுகள் ஏற்கனவே அனுமதியளிக்க மறுத்து விட்டன. (எ)

**வெளி உலகில்**

# நெல்சன் மண்டேலா விடுதலையாவாரா? அரசு நடவடிக்கை எழுப்பியுள்ள ஊகம்

கேப்டவுன், செப். 1

கறுப்பு இனத்தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலா அரசு மருத்துவமனையில் இருந்து தனியார் மருத்துவமனை ஒன்றுக்கு இடமாற்றப் பட்டார்.

டாக்டர் மண்டேலா கடந்த 26 வருடகாலமாக வைக்கப்பட்டிருந்த சிறைக்கு அவர் கொண்டு போகப்படாதது உலக வட்டாரங்களில் பலவித அபிப்பிராயங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

காசநோயினால் பீடிக்கப்பட்ட டாக்டர் மண்டேலா கடந்த 3 வாரங்களாக அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தார்.

தனியார் மருத்துவமனைக்கு அவர் இடமாற்றஞ் செய்யப்பட்டது, அவரை தென்ஆபிரிக்க அரசு விடுவிக்கப்போகிறது என்ற ஊகத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

டாக்டர் மண்டேலாவுடன் அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்த நிறவெறி அரசு முயற்சிக்கிறது என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

# 1988 நோபல் சமாதானப் பரிசு யாருக்கு? இம்மாதம் 28 ஆம் திகதி தெரியும்!

ஒஸ்லோ, செப்1

இவ்வாண்டிற்கான நோபல் சமாதானப் பரிசு யாருக்கு வழங்கப்படும் என்று இம்மாதம் 28 ஆம் திகதி தீர்மானிக்கப்படவுள்ளது.

நோர்வே தலைநகரான ஒஸ்லோவில் உள்ள நோபல் பரிசுக்குழு உறுப்பினர் ஒருவர் முன்கண்ட தகவலை தெரிவித்தார்.

சமாதானப் பரிசு பெறுவதற்காகச் சிபார்சு செய்யப்பட்டவர்களின் பட்டியலில் இப்போது நான்கு பேரின் பெயர்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

அந்தப் பட்டியலில் அமெரிக்க அதிபர் றேகன், சோவியத் தலைவர் கோர்பச்சேவ் ஆகியோரின் பெயர்கள் உள்ளனவா என்று கேட்ட போது,

''இக்கேள்விக்குப் பதிலளிக்க முடியாது. சரியான, தகுதியான ஒருவரைத் தெரிவு செய்வது கஷ்டமானதாக இருக்காது''— என்று குழு உறுப்பினர் சொன்னார்.

1988 நோபல் சமாதானப் பரிசுக்கு ஐ. நா. பொதுச் செயலாளர் பெரெஸ்டி குயிலரின் பெயர் சிபார்சு செய்யப் படவில்லை.

பாப்பரசர், இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, நோர்வே பிரதமர் குரோ ஹர்லம் பிரண்டலண்ட் ஆகியோரின் பெயர்களும் சிபார்சு செய்யப்பட்டுள்ளன.

நோபல் சமாதானப் பரிசு பெறுபவருக்கு 3 லட்சத்து 82 ஆயிரம் டொலர் பணமும் வழங்கப்படும் (எ)

அமெரிக்கக் குற்றச்சாட்டு:

# ஆப்கன் உடன்பாட்டை சோவியத் மீறி விட்டது!

வாஷிங்டன், செப் 1

ஆப்கன் உடன்பாட்டை சோவியத் யூனியன் மீறி விட்டதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியிருக்கிறது.

ஆப்கனிஸ்தானில் கிளர்ச்சிக்காரர்களைப் பற்றிய பிரதேசம் ஒன்றை மீட்பதற்கு சோவியத்யூனியன் தனது பிரதேசத்தில் இருந்து யுத்த விமானம் ஒன்றை அனுப்பியது என்று அமெரிக்கா கூறுகிறது.

அமெரிக்காவின் குற்றச்சாட்டை சோவியத் யூனியன் நிராகரித்து விட்டது. (எ)

## முட்டுக்கட்டை நீடிக்கிறது

ஜெனிவா, செப். 1

காலம் போய்க்கொண்டிருக்கிறது என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலர் நேற்றுச் சொன்னார்.

வளைகுடாப் பேச்சுக்களில் காணப்படும் முட்டுக் கட்டையைத் தீர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டு இருந்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முட்டுக்கட்டை தீருவதற்கான அறிகுறி காணப்படவில்லை என்றும் அவர் சொன்னார் (எ)

## விமான விபத்தில் 15 பேர் பலி

வாஷிங்டன், செப். 1

டெக்ஸாஸ் மாநிலத்தில் நேற்று இடம் பெற்ற போயிங் விமான விபத்து ஒன்றில் 15 பயணிகள் உயிரிழந்தனர்.

விமானம், ஓடுபாதையில் ஓடி மேல் எழும்பும் போது, அதன் வால் பகுதி தரையில் மோதியதால் விபத்து ஏற்பட்டது.

விமான ஓட்டிகளும் உயிரிழந்தனர். (எ)

---

# தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றும் நல்லை ஆதீனம்

## 22 ஆவது ஆண்டு விழா இன்று

ஈழத்திலேயுள்ள ஒரே ஒரு ஆதீனம் என்றால் அது நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தையே குறிக்கும்.

தமிழ் நாட்டில் பல்வேறு ஆதீனங்கள் தோன்றிப் பல காலமாகப் பணி புரிந்து வருகின்றபோதிலும் ஈழநாட்டில் ஓர் ஆதீனம் இல்லாதது பெருங்குறையாக இருந்தது.

ஈழத்துச் சைவப்பெருமக்களின தவப் பயனாக நல்லூரிலே திருஞானசம்பந்தர் ஆதீனத்தை 1966ஆம் ஆண்டு ஸ்ரீமத் ஸ்வாமி நாததம்பிரான் ஸ்வாமிகள் நிறுவினார்கள்.

இன்று (2-9-1988) வெள்ளிக்கிழமை நல்லை ஆதீனத்தில் இருபத்திரண்டாவது ஆண்டுவிழா கொண்டாடப்படுகின்றது.

நல்லை ஆதீன முதல்வர் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் மகாசந்நிதானத்தைக் குருவாகப் பெற்று மந்திரோபதேசமும் காஷாயமும் வாங்கிக்கொண்டார்கள்.

தம்பிரான் ஸ்வாமிகள் 1977ஆம் வருடம் ஆவணி மாதக் கார்த்திகை நட்சத்திரத்தில் நல்லை ஆதீனக் குரு முதல்வராக அபிஷேகம் செய்து ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள் எனத் திருநாமம் கொண்டார்கள்.

'தாரமும் குருவும் தலைவிதிப்படியே' என்ற மரபுக்கு ஏற்ப இன்று அவர் வழியில் ஒழுகிய திரு. நாகலிங்கம் சுந்தரலிங்கம் என்னும் பூர்வாசிரமப் பிள்ளையவர்கள் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் என்னும் தீட்சா நாமத்தோடு, இரண்டாவது குருமகா சந்நிதானமாக அரும்பணி செய்துவருகிறார்.

ஆதீனம் என்றால் பேம்பாட்டுக்குரியது எனப் பொருள்படும்.

இந்த வகையிலே நல்லைஆதீனமானது எல்லோருக்கும் சிறப்பாக இந்துக்களது பேம்பாட்டுக்குரிய இடமாக விளங்கிவருகிறது.

> நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 22 ஆவது ஆண்டுவிழா இன்று கொண்டாடப்படுகிறது இதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகி உள்ளது

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமானது முதலாவது குருமகா சந்நிதானம் இருக்கும் பெழுது பல்வேறு பணிகளைச் செய்து வந்தது

இவற்றுள் இன்னிசை, கதாப்பிரசங்கம் குறிப்பிடத்தக்கது.

மற்றும் ஆதீனத்தில் மூர்த்திகளுக்கு நடைபெறும் நித்திய, நைமித்திய பூஜைகளைத் தவிர இலவச சேவைகள் பல நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த இருபத்திரண்டு வருடங்களில் நல்லை ஆதீனம் துரித வளர்ச்சி அடைந்ததும் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்,

இத்தகைய வளர்ச்சிக்கு குரு முதல்வரதும் இரண்டாவது குருமுதல்வரதும் அயராத முயற்சியே காரணம்.

இவர்களுக்கு அவ்வப் [illegible]

உதவிகளைக் கொடை [illegible]

வான்கள், பண்டிதர்கள், புலவர்கள், நலன் விரும்பிகள், தொண்டர்கள், குருமார்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், சைவ அபிமானிகள், நிர்வாக உத்தியோகஸ்தர்கள் செய்து வருகின்றனர்.

ஆதீன முதல்வரதும் இரண்டாவது குருமகா சந்நிதானத்தினதும் நோக்கங்கள் எல்லாம் இனிது நிறைவேறுவதற்குப் பக்கபலமாக இருப்பது இந்துக்கள் ஒவ்வொருவரதும் சைவ உலகத்தினரதும் கடமை ஆகும்.

ப. கணேசலிங்கம்
இந்து மன்றம்,
(யாழ் பல்கலைக்கழகம்)

★

## உணவு முத்திரை விநியோகம் இடை நிறுத்தம்

வேலணை, செப்.2

குழந்தைகளுக்கும் புதிதாக விண்ணப்பித்தோருக்குமான நிவாரண உணவு முத்திரைகள் வழங்கும்வேலைகள் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இவர்களுக்கான உணவு முத்திரைகள் இம்மாதம் கடந்த 22 ஆம் திகதி அலுவலகங்கள் இயங்க ஆரம்பித்தவுடன் வழங்கப்படவிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-167)

## ஆலாலு நினைவாக அன்னதானம்

யாழ்ப்பாணம், செ, 2

அமரர் ஆ. மு. ஆலாலசுந்தரத்தின் மூன்றாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி இன்று வெள்ளிக்கிழமை நல்லூர் பேச்சியம்பாள் ஆலயத்தில் அன்னதானம் வழங்கப்படவுள்ளது. (இ - 10)

**சமய சந்நிதிகளில்**

## கிருஷ்ணர் கோயில் அலங்கார உற்சவம்

காங்கேசன் துறை செ 1

கீரிமலை அருள்மிகு கிருஷ்ணர் ஆலயத்தின் அலங்கார உற்சவம் எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

3ஆம் திகதி கிருஷ்ண ஜயந்தி உற்சவம் நடைபெறும்.

மறுநாள் 4ஆம் திகதி அலங்கார உற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெற்று சங்காபிஷேகம், திருக்கல்யாணம் ஆகியவற்றுடன்பூர்த்தி அடையும்.

உற்சவ ஒழுங்குகளை ஆலய தர்மகர்த்தா சபையினர் மேற்கொண்டுள்ளனர். (சி-68)

## மண்டலாபிஷேகம்

சாவகச்சேரி, செப்.1

இத்தியடிப்பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேக விழாக்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

45 நாட்களுக்கு நடைபெறும் இவ்விழாவில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு நா. முத்தையா, விநாயகரின் மகத்துவம் என்னும் தொடர் பற்றி சொற்பொழிவாற்றுவார். (சி-31)

## சிறப்பாக நடந்து

காங்கேசன்துறை செப் 1

பலாலி தெற்கு, வயாவிளான் புனித மரியாள் வருடாந்தத் திருநாள் கொண்டாட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

பலாலி தெற்கு புனித யாகப்பர் ஆலயத்தில் பங்குக்குரு அருட் திரு. பேனுட்றெக்னே அடிகள் திருப்பலி பூஜை நிறைவேற்றிப் புனித மரியாளின் சொரூப ஊர்வலத்தை ஆரம்பித்து வைத்தார். (சு-68)

**நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்**

## வீர வேலுடன் வந்து காத்திடும் கந்தன்!

அல்லலைத் தீர்த்திடும் கந்தன்
நல்லை நகரிலே அடியவர்
நாடிடும் கந்தன்

வல்லமை கொண்டவன் கந்தன்
தொல்லை தந்திடும் அசுரரைத்
தொலைத்தவன் கந்தன்

தில்லையில் ஆடிடும் சிவனார்
செல்வ மகனாகத் தேவரைக்
காத்தவன் கந்தன்

தந்தைக்கு உபதேசம் செய்து
சற்குருவாகிக் கலை ஞானம்
தந்தவன் கந்தன்

அறுபடை வீடுகள் தோறும்
ஆடி அடியவர் மகிழ்ந்திட
அருள்தரும் கந்தன்

வெந்திடும் வேதனை கண்டு
வீர வேலுடன் வந்துமே
காத்திடும் கந்தன்.

—வ. யோகானந்தசிவம்

## சேமமடுவில் கைதான 46பேர் தீவிர விசாரணையில்!

வவுனியா செப் 2

சேமமடு சுற்றிவளைப்பின் போது கைது செய்யப் பட்டவர்களில் 46 பேர் தவிர அனைவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளையில் தொடர்ச்சியாக உணவின்றி வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டதாகவும் துன்புறுத்தப் பட்டதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள 46 பேரும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் விசாரணையின் பின்னர் இவர்களும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று நம்பப்படுகின்றது.

இதே வேளையில் சேமமடு முதலாம் யுனிட், இரண்டாம் யுனிட், மாவிலங்கை, நொச்சிக்குளம், ஆறுமுகத்தான் புதுக்குளம், இளமருதங்குளம் போன்ற கிராமங்களில் இருந்து வெளியேறிய சுமார் 800 குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளார்கள்.

இக்கிராமங்களுக்கு திங்கட்கிழமை வவுனியா அரசாங்க அதிபர் திரு. ரீ. லங்காநேசன் விஜயம் செய்து நிலமையை நேரில் அவதானித்தார்.

இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்தவர்களுக்கு மேலும் ஒருவாரத்திற்கான பங்கீட்டு உணவுப் பொருள்கள் வழங்கவும் அவர் ஏற்பாடு செய்துள்ளார். (ஒ-164)

## கட்டடம்

கோப்பாய் செப் 2

இராணைதீவு றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு நோறாட் உதவியுடன் லட்சம் ரூபா மதிப்புள்ள கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வருகின்றது. (சி-72)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வீட்டுப் பாவனைக்கேற்ற முறையில்
பைக்கட்டுகளில் வறுத்து அரைத்த
**அண்ணா மிளகாய்த் தூள்**
தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளுங்கள்.

**அண்ணா கோப்பிக் கடை**
**யாழ்ப்பாணம்.**



# உதயன்

02 - 09 - 1988 வெள்ளிக்கிழமை



**வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.**
பற்களுக்கு உறுதியும் வெண்மையும்
கொடுப்பது
**அண்ணா பற்பொடி**
அண்ணா பற்பொடி தற்பொழுது மக்களின்
வசதிக்கேற்ப 100 g. பக்கட்டுகளிலும்
வெளிவருகின்றது!
100 g வெற்றுப் பைக்கட்டுகளைச்
சேர்த்துக் கொடுத்து
**இனாம் பொருட்களைப் பெற்றுக்
கொள்ளுங்கள்.**


## நாளைய சஞ்சீவியில்

★ தென்துருவத்தில் இருந்து உலகுக்கு ஆபத்து வரப்போகிறது—ஓர் ஆய்வு.

★ முத்தமிழால் வைதாரையும் வாழவைப் போன்—பேராசிரியர் அ. சண்முகதாஸின் பக்திக் கட்டுரை.

★ அன்புக்கு ஏங்கும் இதயம்—காரை யோகேஸ்வரி சிதம்பரப்பிள்ளையின் சிறுகதை.

★ உடல் சிதறிப்போன லியா எப்படி அடையாளங் காணப்பட்டார்?

★ புருவை திசை மாறச்செய்யும் சூரியனின் சீற்றம்!

★ தென்னம்பாளைச் சிரிப்பே நல்லது—பெண்களுக்கு ஓர் ஆலோசனை.

★ இந்திய சினிமா—வெள்ளிவிழா ஆண்டு பற்றிய கண்ணோட்டம்.

★ வீட்டுக்கு வீடு 'ஹெக்டே'

★ ஆப்கன் பாணியில் அங்கோலா தீர்வு—உலக உலா.

★ குருவாயூரப்பனை—நம்பியுள்ள உஷா.

★ 'ஜெ' அணி தி. மு. க. வுடன் சேர முயற்சியா?—தமிழக அரசியல்.

★ மற்றும் வழமையான அம்சங்கள்.

University of Jaffna

**Certificate course in Data Processing and BASIC Language Programming**

**Batch II, 1987.**

The examination on the above course will commence on 24 September 1988. The students following the above course and repeat candidates are requested to complete and submit the examination entry forms before 15th September 1988.

The admission cards will be issued from 20th September 1988. The candidates are requested to collect their admission cards at the Computer Unit, University of Jaffna.

**Assistant Registrar**
Faculty of Science
University of Jaffna. (C-19)


## தேன் இசை மழை பொழிகிறது

சாவகச்சேரியில் ஒரு புதிய இசை அருவி. ஆம், இதுவரை தரமான வீடியோ படப் பிரதிகளை வழங்கி பலரின் பாராட்டுக்களைப் பெற்ற நாம் இப்போது எமது புதிய இணைப்பாக இசை மழை பொழிகின்றோம்.
உங்களுக்குத் தேவையான

**பழைய, புதிய பக்திப் பாடல்களையும் தமிழ் திரைப்படப் பாடல்களையும் ஆங்கில, ஹிந்திப் படப்பாடல்களையும் பதிவு செய்து கொடுக்கின்றோம் என்பதை மகிழ்ச்சிகரமாக தெரிவித்துக் கொள்கின்றோம்.**

★ நவீன சாதனங்கள் மூலம் சிறந்த ஒலிப் பதிவாளர்களால் பதிவு செய்யப்படுகிறது.
★ உங்கள் ஓடர்கள் குறுகிய இடைவெளியில் செய்து கொடுக்கப்படுகிறது.
★ அத்தனையும் புதிய தரமான ரெக்கார்டுகளில் இருந்து பதிவு செய்யப்படுகின்றது.

வாடிக்கையாளர்களுக்கு எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சுமதி வீடியோகிளப்**
கண்டி வீதி,
(ஹோட்டல் ஜனந் அருகாமையில்)
சாவகச்சேரி.
(6281)


மதுரை வங்கிக் கொள்ளை:

# தமிழ் நாட்டை தனியாக பிரிக்கத் திட்டமிட்டோம்

## கைது செய்யப்பட்டவர் தகவல்

சென்னை, செப். 2
மதுரை வங்கிக் கொள்ளை சம்பந்தமாக கைது செய்யப்பட்டுள்ள ஐவரில் ஒருவர் மதுரையின் முன்னாள் மேயர் முத்துவின் மகன் நல்லதம்பி என்று அறிவிக்கப்படுகிறது.

ஏனையவர்கள் வருமாறு:— வழக்கறிஞர் ரவிக்குமார், அனந்தன், விஜயகுமார், குருமூர்த்தி.

நல்லதம்பி உட்பட 5 பேர் மீதும் தேசவிரோத வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது.

நல்லதம்பி பொலீஸுக்கு அளித்த வாக்கு மூலத்தில் "இந்தியாவில் இருந்து தமிழ் நாட்டை தனியாகப்பிரிக்க நானும் நண்பர்களும் திட்டமிட்டோம். இதற்காக தமிழ் நாடு மக்கள் விடுதலை இயக்கம் என்ற புதிய இயக்கத்தை தொடங்கினோம். அதற்கு ஆயுதம் வாங்கவே வங்கிகளில் கொள்ளையடித்தோம்" - என்று தெரிவித்திருக்கிறார்.

மதுரையைச் சேர்ந்த பொலீஸ்காரர் ஒருவரும் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். (ஒ-எ)

## மரணச் சடங்கிற்கு சென்றுவிட்டு திரும்பியவர் விபத்தில் பலி!

யாழ்ப்பாணம், செப். 2
மரணச் சடங்கு ஒன்றுக்குச் சென்று விட்டு மினி பஸ்ஸில் வீடு திரும்பியவர் பஸ் விபத்தில் சிக்கியதில் மரணமானார்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த கணபதி தியாகேஸ் (வயது 57) என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

இவர் காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றுபவர் எனத் தெரியவந்துள்ளது.

31 ஆம் திகதி நயினாதீவில் உள்ள ஒருவரது மரணச் சடங்கிற்குச் சென்று விட்டு மினி பஸ்ஸில் யாழ்ப்பாணம் திரும்பிக் கொண்டிருந்தார்.

பிற்பகல் ஐந்தரை மணி அளவில் மினிபஸ் அராலிச் சந்திக்கு அண்மையில் விபத்தில் சிக்கியது.

இதனால் இவர் வெளியே தூக்கி வீசப்பட்டு இவர் மீது வாகனம் கவிழ்ந்ததில் நசியுண்டு மரணமானார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணையை யாழ். திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. க. கேசவன் நடத்தினார்.

மரணமானவர் 7 பிள்ளைகளின் தந்தை.

இந்த விபத்துப் பற்றிய செய்தி நேற்றைய உதயனில் சுருக்கமாக வெளியாகி இருந்தது தெரிந்த[illegible]

## நித்திகை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணிக்கை தரப்படவில்லை.

அழிக்கப்பட்ட பிரதான முகாம் பகுதியை லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் செவ்வாயன்று நேரில் சென்று பார்த்ததாகவும், இந்தியச் செய்தியாளர்கள் அவருடன் கூடச் சென்றனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

அடர்ந்த காட்டில் போராளிகளின் பிரதான முகாமைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருந்த சிறு சிறு முகாம்களையும் அமைதிப்படை அழித்து விட்டதாகக் கூறப்பட்டது. (அ-எ)

## தடுப்புக் காவலில் உள்ள இளைஞர்களை பெண்கள் பார்க்க வசதி இல்லை

யாழ்ப்பாணம் செப். 2
காங்கேசன்துறை புனர்வாழ்வு நிலைய முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களைப் பார்வையிட பெண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் தமது பிள்ளைகளைப் பார்வையிடச் செல்லும் பல தாய்மார்கள் அதற்குச் சந்தர்ப்பமில்லாமலே திரும்ப வேண்டிய அவலம் ஏற்படுகிறது

பிரஸ்தாப நிலையத்தில் உள்ள இளைஞர்களைப் பார்வையிடச் செல்லும் பெண்களை சோதனையிடும் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தின் பெண் உத்தியோகத்தர் அங்கு இல்லாததன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக அவரது இடத்துக்குப் பதிலாக வேறு எவரும் நியமிக்கப்படவில்லை. அதனால் பெண்கள் மேற்படி நிலையத்திற்குள் அனுமதி மறுக்கப்படுகிறது.

இதேவேளை ஆண்கள் எதுவித சிரமமுமின்றி இளைஞர்களைப் பார்வையிட அனுமதிக்கப்படுகிறார்கள். (ஒ-10)

## 65,000 சேத. . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டிலிருந்து அழிவுக்கும், சேதத்திற்கும் உள்ளாகியிருந்தன.

இதன்படி இந்த வீடுகளைப் புனரமைப்பதற்கான திட்டங்களை 'செயார்' ஸ்தாபனம் தயாரித்தது.

நன்கொடை மூலமும் கடன் உதவிகள் மூலமும் கட்டடப் பொருள்கள் மூலமும் வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்கி இந்த புனர் நிர்மாண வேலையை மேற்கொள்ள பிரஸ்தாப ஸ்தாபனம் தீர்மானித்தது.

யாழ் மாவட்டத்தில் 65 ஆயிரம் வீடுகளை புனரமைக்க சுமார் மூன்று கோடியே ஒரு லட்சத்து 48 ஆயிரத்து எழுநூற்றி அறுபது அமெரிக்க டாலர் செலவாகும் என்று ஒரு மதிப்பீடும் தயாரிக்கப்பட்டது.

ஆனால் தற்போதுள்ள சூழ்நிலையில் நிர்மாண வேலைகளையும், கட்டடப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான வேலைகளையும் ஆரம்பிக்க முடியாமலிருக்கிறது.

நிலைமை சீராகும் போது நிர்மாண வேலைகள் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதுவரை திட்டமிட்ட வேலைகளும் புனர் நிர்மாண வேலைகளுக்குத் தேவையான மேசன்மார், தச்சுத்தொழிலாளர் மற்றும் பயிற்றப்பட்ட ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கும் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ-ஐ.10)

## காங்கேசன்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துறை சிமெந்து பொதுத் தொழிலாளர் சங்கமும் காலை 10மணி முதல் 12 மணி வரை இரண்டு மணித்தியால பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளது.

நேற்றைய போராட்டத்தில் 900க்கும் அதிகமான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

ஏனைய மூவரையும் படையினர் விடுதலை செய்யத் தவறினால் தமது போராட்டத்தை விஸ்தரிக்கப் போவதாக கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் அறிவித்துள்ளது. (ஒ-10)

## தடுப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யக் கோரியும்—

திட்டமிட்ட சிங்கள அரச குடியேற்றங்களையும் இராணுவ பரவலாக்கங்களையும் கண்டித்து மக்களின் பரந்துபட்ட எதிர்ப்பை இந்திய, இலங்கை அரசுகளுக்குத் தெரியப்படுத்தவுமே—இந்தக் கையெழுத்து இயக்கம் ஆரம்பிக்கப்பட இருப்பதாக 'கைஸ்' அறிவித்துள்ளது. (ஒ-10)

## மதுரையில்.....

கள் நடத்தப்படும்.

பிரதமர் ராஜீவ்காந்தியின் தமிழர் விரோதப் போக்கை எதிர்த்து போராட்டம் நடத்துவது சம்பந்தமாக மாநாட்டில் முடிவுகள் எடுக்கப்படும் என்று திரு. நெடுமாறன் தெரிவித்திருக்கின்றார். (ஒ-எ)

## பூஸா....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் பதிவு செய்துள்ளனர்

பூஸாவுக்குச் செல்வதற்கான நிதியுதவியை றெட்பானா நிறுவனம் வழங்கும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனிடையில் இந்திய அமைதிப்படையினர் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் உண்ணாவிரதம் இருக்கும் உண்ணாவிரதிகளை அடிக்கடி நேரடியாகச் சென்று பார்த்து வருகின்றனர்.

பூஸா கைதிகளின் உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக நேற்றுடன் ஏழாவது நாள் உண்ணாவிரதம் [illegible] ஒழுங்கு செய்யப்பட்டு [illegible]படுத் தக்கது. (ஒ 10)

## வீட்டில்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பித்தனர்.

இதனை அறிந்து காங்கேசன்துறை இராணுவ முகாம் உயரதிகாரியான மேஜர் நாயர் புதன்கிழமை காலை பதினொரு மணியளவில் பெற்றோருடன் தொடர்பு கொண்டு உண்ணாவிரதத்தை கைவிடச் செய்து மகனைப் பார்ப்பதற்கு அனுமதி வழங்கினார்.

தந்தையார் மட்டுமே மகனைப் பார்க்க அனுமதி வழங்கப்பட்டது.

இதேவேளை இவரை விடுதலை செய்யக்கோரி பாடசாலை மாணவர்கள் சாத்விகப் போராட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்து வருவதாக அறியவருகிறது. (ஒ1-0)

## காமினி.....

விரதத்தை மேற்கொண்ட ஆறு தமிழ் அரசியல் கைதிகளில் மூவர் தமது முயற்சியை கைவிட்டு விட்டனராம்.

அவர்களில் ஒருவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரிஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

## 6 பேர்விடுதலை

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் நீர் கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏழுபெண்களில் ஆறு பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

## போராளி....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இணக்கத்துடன் தெரிவு செய்யப்பட்டவர்களை உள்ளடக்கும் விதத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு விரிவுபடுத்தப்பட வேண்டும்–

தேசிய ஒற்றுமைக்கான செயல் முறைக்கு குந்தகம் ஏற்படுத்தும் விதத்தில் எந்த ஒரு கட்சியினரோ அல்லது அரசாங்க அதிகாரியோ மனித உரிமைகளை மீறுகின்றனரா என்று மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்பார்வை செய்ய வேண்டும்.

அத்துடன் விரிவுபடுத்தப்பட்ட ஆணைக்குழு சம்பந்தப்பட்ட சகல தரப்பினராலும் மதிக்கப்பட வேண்டும்

இதே நேரத்தில் ஊர் காவல் படையினர், தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களும் சம்பந்தப்பட்ட சுயேச்சை அமைப்பிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்

தமிழ்ப் போராளிகள் மாகாண சுய அரசு மூலம் தங்கள் உரிமைகளைப்பெற்றுக்கொள்ளவும், பெரும்பான்மை மக்களுடன் கைகோர்த்து தங்கள் சுதந்திரத்தைப் பெறவும் உழைக்க வேண்டும்.

சிங்களப் போராளிகளும், அரசியல் எதிர்க் கட்சிகளும் மாகாண சபைமூலம் அதிகாரப் பரவல் செய்யும் முறையை ஏற்க வேண்டும். (அ-ஐ)

## ★ இந்திய சபைகளில் கைகலப்பு

நேற்று [illegible] பிரதம மந்திரியின் அலுவலகத்தின் முன் மறியல் செய்த ஆந்திர பிரதேச சட்டமன்ற உறுப்பினர்கள், எம்பிக்கள் மீது பொலீஸார் குண்டாந்தடி தாக்குதல் நடத்தியதாக குற்றம்சாட்டப்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமான பிரச்சினை நேற்று லோகசபையிலும், ராஜ்யசபாவிலும் எழுப்பப்பட்டது

அப்போது அரசு எம்பிக்களுக்கும் எதிர்க்கட்சி எம்பிக்களுக்கும் இடையில் காரசாரமான வாக்குவாதமும் கைகலப்பும் இடம்பெற்றன.

இந்திய நாடாளுமன்றச் சரித்திரத்தில் இப்படி ஒரு சம்பவம் இடம் பெற்றது இதுவே முதல் தடவை என்று சொல்லப்படுகிறது. (ஒ-எ)

## சேவையால் உயர்ந்த உத்தமர் திரு. இ. சபாலிங்கம்

எமது நிதியின் தலைவராகவும் செயற்குழு உறுப்பினராகவும் திறம்படக் கடமையாற்றி நிதியினை வளம்பெறச் செய்த செயல் வீரர் சபாலிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவர் அருள்புரிவாராக.

ப. சண்முகராசா, தலைவர். இ. மகேந்திரன், செயலாளர்.

வடமாகாண ஆசிரிய சங்க சகாய நிதி
ஜும்மா மசூதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். ( C/14 )

# மரண அறிவித்தல்கள்

## திருமதி. செல்வநாயகி கனகசுந்தரம்

இளவாலை வடக்கைச் சேர்ந்த கனகசுந்தரம் (கிளாக்கர்) அவர்களின் அன்பு மனைவியும், புஸ்பராணி, விஸ்வநாத முதலியார் (Hatton National Bank Colombo), முருகதாசன், (T. a. Irrigation Dept வவுனியா), சிறிதரன் (Hatton National Bank Colombo, காலஞ் சென்ற உமாராணி ஆகியோரின் அன்புத்தாயாரும் சிவராசரட்ணம் (அதிபர் நடேஸ்வராக் கல்லூரி), தவமணிதேவி, விஜயலட்சுமி (ஆசிரியை யாழ் / மெய்கண்டான் M. V.) ஆகியோரின் அன்பு மாமியாரும், மோகன் (யாழ் / மருத்துவபீடம்), சுரேஸ் (பேராதனை / பொறியியல் பீடம்), குகநாதன், தாரணி, மயூராஜ், திருபா, ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆகிய திருமதி செல்வநாயகி 31 - 08 - 1988 இல் காலமானார். அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக அவரது வீட்டிலிருந்து சனிக்கிழமை (03 - 09 - 88) காலை 9.00 மணிக்கு கீரிமலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

தகவல்.
கனகசுந்தரம்
Main Street
இளவாலை. [6108]

## திரு. செல்லர் பரமலிங்கம்

எட்டியாந்தோட்டை லிங்கம் ஸ்ரோர் உரிமையாளர் இணுவில் செ. பரமலிங்கம் அவர்கள் 01-09-88 இல் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி செல்லர் அவர்களின் ஆறுவது மகனும் திருமதி தவமணியவர்களின் அன்புத்துணைவரும் நன்மக்கள் அருமைநாதன், லிங்கநாதன் ஆகியோரின் தந்தையாவார். இறுதிக் கிரியை 03-09-88 பிற்பகல் 2 மணியளவில் காரைக்கால் புனித பூமியில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்

தகவல் கொடுப்பவர்:
கா. செ. நடராசா.
இணுவில்.
(6105)

## திருமதி வள்ளிநாயகி நடராசா

திருமதி வள்ளிநாயகி நடராசா காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற சுந்தரம் நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற இரத்தினசபாபதி அன்னபூரணம் அவர்களின் அன்பு மகளும் பத்மினி, ரோகினி, (ஈஸ்வரன் Manager Safety Travels) ஆகியோரின் அன்புத் தாயாரும் A R. ஆறுமுகம். சுப்பிரமணியம், காலஞ்சென்ற அம்பலவாணர் (Engineer) சிவகுருநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரவணபவன், (Engineer) மகேந்திரன் (Engineer) கமலா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 3-9-88 சனிக்கிழமை காலை 9 மணியளவில் 'கமலாலயம்' 102, அம்பலவாணர் வீதி, அத்தியடியில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகின்றோம்.

அத்தியடி
[6286]
தகவல்:
பிள்ளைகள்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 02-09-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Friday 2nd September 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org